# "திருக்கோயில்களின் வளர்ச்சியும் திருத்தலச் சிறப்பும்"

*முனைவர் சு. இரவிச்சந்திரன்*
முதல்வர்
அரசர் கல்லூரி, திருவையாறு

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: செப்டம்பர்

வருடம்: 2022

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v10iS1-5204

**திருக்கோயி லில்லாத திருவி லூரும்**
**திருவெண்ணீ றணியாத திருவி லூரும்**
**பருக்கோடிப் பத்திமையாற் பாடா வும்**
**பாங்கினொடு பலதளிக ளில்லா வூரும்**
**விருப்போடு வெண்சங்கம் ஊதா வூரும்**
**விதானமும் வெண்கொடியு மில்லா வூரும்**
**அருப்போடு மலர்பறித்திட் டுண்ணா வூரும்**
**அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே**
**-அப்பர், தனித்திருத்தாண்டகம்**

நீர் வளத்தையும் நிலவளத்தையும் பல்வகைச் செல்வ வளத்தையும் ஓர் ஊர் பெற்று இருந்தாலும் திருக்கோயில் இல்லாத ஊர் திருவில் ஊர் என்றும் அது ஊராகாது "அடவியாகிய காடு" என்றும் அழைக்கப்பெறும்.

"ஆலயம் தொழுதல் சாலவும் நன்று" என்ற முதுமொழிக்கு ஏற்பத் தமிழகம் முழுவதும் திருக்கோயில்கள் உள்ளன. தமிழரின் வாழ்வியலோடு மிக நெருங்கிய தொடர்பு உடையனவாகத் திருக்கோயில்கள் அன்றும் இன்றும் விளங்கி வருகின்றன.

நாயன்மார்களாலும் ஆழ்வார்களாலும் பாடப்பட்டனவாகத் திருத்தலங்கள் விளங்குகின்றன. இத்திருத்தலங்கள் வரலாறு, இலக்கியம், கலை ஆகியவற்றை வளர்ப்பதோடு வாழ்வியல், சமூக, வரலாற்று நிலைகளையும் எடுத்துரைக்கின்றன.

துன்பத்தினால் அளவு இல்லாத் துயர் அடையும் மக்கட் சமுதாயத் திற்குத் திருத்தலங்கள் ஆறுதல் தரும் புகலிடமாகத் திகழ்கின்றன. அத்துடன் நெறிப்படுத்துகின்ற வழிகாட்டியாகவும் சமூகப் பண்பாடு களைக் காத்தும் வளர்த்தும் வருகின்ற பண்பாட்டுக் காப்பகமாகவும் விளங்குகின்றன. இவை தனிமனித மேம்பாட்டிற்கும் சமுதாய மேம்பாட்டிற்கும் பெரிதும் துணைபுரிகின்றன.

மனிதன் வாழுகின்ற சூழலுக்கு ஏற்பக் கடவுளும், தத்துவச் சிந்தனைகளும் பல்வேறாக அமைந்துள்ளன. உலகச் சமயங்களுள் ஒன்றாகப் போற்றப்படுவது இந்து சமயமாகும். இதில் சைவம், வைணவம் என்பவை அடங்கும். சைவ சமய பக்தி நெறியில் திருக்கோயிலின் பங்கு அளப்பரியதாகும்.

**பக்தி நெறி**

உலகமக்கள் அனைவரும் தம் வாழ்க்கையில் அன்றாடம் கடைப்பிடிக்க வேண்டிய ஒன்றாகத் தெய்வ வழிபாடு அமைந்துள்ளது. நாடு, மொழி, இன வேறுபாடு இன்றி அனைவரும் ஏற்றுக்கொண்டது இறை உணர்வாகும். ஊலகில் பல உயிர்கள் வாழ்கின்றன. இவை வாழ்வதற்கு உணவு மிக அவசியமான ஒன்றாகும். உணவை விட இறைவழிபாட்டையே மக்கள் சிறந்ததாகக் கருதுகின்றனர்.

தமிழர் முதன்முதலில் இயற்கைச் சக்திகளை வணங்கி வந்தனர். பின் அவற்றைத் தெய்வங்களாக உருவகித்தனர். கடல்கோள், புயல், நிலநடுக்கம் என இயற்கையாலும் புலி, சிங்கம், பாம்பு போன்ற விலங்குகளாலும் ஏற்படுகின்ற துன்பத்தை நினைத்துப் பெரிதும் அஞ்சினர்.

மரங்கள், பறவைகள், விலங்குகள் என்பவற்றை அவற்றின் குறியீடாகக் கொண்டு பின்பு வணங்கினர். இத்தெய்வ உணர்வால் ஞாயிறும், திங்களும், விண்மீன்களும் சுடர்விட்டு விளங்குவதற்கு இடமாகிய வானையும், கடல் சூழ்ந்த உலகினையும். நிலமெங்கும் பரவி வாழுகின்ற பல உயிரினங்களையும் ஒன்று சேர்த்துப் பார்க்கின்ற பல வகையான நம்பிக்கைகள் மக்களிடம் வளர்ந்து வந்தன.

உலகம் முழுவதும் பரவி வாழ்ந்து வருகின்ற மக்களின் உணர்விற்கு ஏற்ப அவர்களால் வழிபடப்படுகின்ற தெய்வங்களின் திருவுருவங்களும், அடையாளங்களும் வழிபடும் இடங்களும் திருக்கோயில்களாக விரிவடைந்துள்ளன.

தமிழகத்தின் மிகப்பெரிய வரலாற்று ஆவணங்களாகத் திருத்தலங்கள் திகழ்கின்றன. கோயிலின் தோற்றம், வளர்ச்சி, நடைமுறை வழிபாட்டு முறைகள், கட்டடக்கலை, ஓவியக்கலை, சிற்பக்கலை, இசை நிகழ்ச்சிகள், திருவிழாக்கள், மக்கள் ஈடுபாடு, மன்னர்கள், வள்ளல்களின் பங்களிப்பு, இலக்கியப் படைப்பு, கலைநிகழ்ச்சிகள், வாழ்வியல் நெறிகள், பண்பாடு போன்ற அவற்றின் கருவுலத் தொகுதியாகத் திருக்கோயில்கள் விளங்குகின்றன.

**திருக்கோயில்களின் பங்கு**

ஐம்பொறிகளுக்கும், மனத்திற்கும் அப்பாற் பட்ட தெய்வத்திற்கு உருவங்கள் தந்து விக்கிரக நிலையில் அமைத்து வழிபடும் இடம் கோயில் எனப்படும்.

தொடக்கக் காலத்தில் அரசன் (கோ) உறையும் இல்லத்தைச் (அரண்மனையைச்) சுட்டிய கோயில் என்ற சொல் நாளுக்கு நாள் கடவுள் இருக்கும் இடம் என்ற பொருளைப் பெற்று வளர்ச்சி நிலையை அடைந்தது. இதனை ஆலயம் என்றும் வழங்கினர். ஆன்மா இலயிக்கும் இடம் ஆலயம் என்பதாகும்.

இறைவனது வடிவத்தைப் புனிதமாகக் கருதி இயற்கை எழிலுடன் பொருந்திய சூழலில் வைத்து வழிபடும் நோக்கமே இதன் அடிப்படையாகும். அதற்கு மலைச்சி கரங்கள், ஆற்றோரங்கள், கடற்கரைகள் முதலிய சூழல்கள் பொருத்தமான இடங்களாக விளங்கின.

தேன்தமிழ்நாட்டில் எங்கு நோக்கினாலும் சோலைகளும், நீர் நிலைகளும் அவற்றின் நடுவில் அழகிய சிற்றூர்களும், நகரங்களும் அமைந்துள்ளன. அவற்றின் நடுநாயகமாகத் திருக்கோயில்கள் காணப்படுகின்றன. இத்திருத்தலங்கள் அடியவர்கள் அனைவரும் வழிபடும் இடமாகவும் சமுதாயக் கூடங்களாகவும் விளங்கி வருகின்றன. எனவே இத்திருக்கோயில்கள் மக்களின் வாழ்வோடு பின்னிப்பிணைந்துள்ளன.

காவிரியாற்றின் வடகரையில் அறுபத்து மூன்று *(63)* திருத்தலங்களும், தென் கரையில் நூற்று இருபத்தேழு *(128)* திருத்தலங்களும் அமைந்துள்ளன. இந்நூற்றுத் தொண்ணூற்றொன்றும் பாடல்பெற்ற சைவத் திருத்தலங்களாகும்.

**தமிழகக் கோயில் வளர்ச்சி**

தமிழரின் கட்டடக்கலை வளர்ச்சி உலகத்தோரால் புகழ்ப்பெறுகிறது. அக்கலையின் சிறப்புக்கு உறுதுணை செய்வது கோயிற் கலையாகும். தமிழகத்தில் நிலைபெற்ற சமயங்கள் அனைத்தும் தத்தம் கடவுளர்க்குக் கோயில் கட்டி வழிபாடு நடத்தின.

**திருக்கோயில்கள்**

இச்சொல் கோஇல் என்னும் இரு சொற்களால் ஆனது. கோ என்பது அரச னையும் இல் என்பது அவன் இருக்கும் இடத்தையும் குறிக்கும், கோ எனும் சொல் ஒகார ஈறு பெற்ற ஒரெழுத்து ஒருமொழி. இல் என்பது உயிருக்கு முதன்மொழி. எனவே, இவ்விரு சொற்களும் நன்னூலாரின் உடம்படு மெய்ப் புணர்ச்சி விதிக்கு ஏற்பக் கோவில் எனப் புணரவேண்டும். ஆயினும் கோயில் என்பதே பெருவழக்காகக் கொள்ளப்பட்டுள்ளது.

**மாயோன் கொப்புழ் மலர்ந்த தாமரை**
**புவோடு புரையும் சீருர் புவின்**
**இதழகத் தனைய தெருவம் இதழகத்**
**தரும் பொருட் டனைத்தே அண்ணல் கோவில்**

எனப் பரிபாடல் திரட்டு (பா.7) வழி அறிய முடிகிறது.

கோயில் எனும் சொல்லுக்குத் தொல்காப்பியர் புணர்ச்சி இலக்கணம் கூறுவதிலிருந்து (எழுத்து -294) இதன் தொன்மையை அறியலாம்.

**மக்கள் வழிபாடு**

தொடக்கால மக்கள் அச்சம் தரும் இயற்கையை வழிபட்டு வந்தனர். பரதவர்கள் சுறாமீனின் கொம்பினை நட்டுவைத்து வருணதேவனை வணங்கிய நிலையை,

**சினைச் சுறவின் கோடு நட்டு**
**மனைச் சேர்த்திய வல்லணங்கின்**

என்ற பட்டினப்பாலைத் தொடர்வழி அறியமுடிகின்றது கடவுளைக் காடு, சோலை, ஆற்றிடை, ஆறு, குளம், வேறு பல இடங்கள், சதுக்கம், சந்தி ஆகிய இடங்களில் வழிபட்டமையை,

**காடும் காவும் கவின் பெரு துருத்தியும்**
**ஆறும் குளமும் வேற பல் வைப்பும்**
**சதுக்கமும் சந்தியும் புதுப்புக் கடம்பும்**
**மன்றமும் பொதியிலும் கந்துடை**

எனப் பல இடங்களில் வைத்து வழிப் பட்டமையைத் திருமுருகாற்றுப்படை மூலம் அறியமுடிகின்றது. நடுகல் வணக்கம் இருந்தமையைத் தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களும் மிகுதியாகப் பேசுகின்றன.

சங்காலமக்கள்பேரூர்கள்தோறும்கடவுளை வழிபடுவதற்கு மக்கள் கூடும் இடத்தில் பொதியில் எனப்படும் அம்பலங்களை ஊரின் நடுவே அமைத்தனர். இவ்வம் பலத்தில் மக்கள் அனைவரும் கூடி இன்ன உரு, நிறம் என அறியாத இறைவனை மலர்தூவி வழிபடுவதற்கு "கந்து" எனப் பெயரிட்டு தெய்வம் உறையும் தூண் ஒன்றும் அமைக்கப்பெற்றிருந்தது. போரின் போது பகை நாட்டிலிருந்து சிறைபிடித்து வரும் மகளிர் பலரும் அங்குள்ள குளத்தில் நீராடிப் பொதியிலாகிய அம்பலத்தில், திருவலகிடுதல், மெழுகுதல் முதலிய பணிகளைச் செய்து மாலைக்காலத்திலே திருவிளக்கு ஏற்றி வழிபட்டனர். ஊர் மக்கள் கூடி தெய்வம் உறையும் தூணாகிய கந்தினை மலர் தூவி வழிபாடு செய்தனர். ஊருக்குப் புதியவராய் வந்தவர்கள் பலரும் அங்கு தங்கியிருந்தனர். இச்செய்தியினை,

**கொண்டி மகளிர் உண் துறை மூழ்கி**
**அந்தி மாட்டிய நந்தா விளக்கின்**
**மலரணி மெழுக்கம் ஏறிப் பவர் தொழ**
**வம்பலர் சேர்க்கும் கந்துடைப் பொதியில்**

என வரும் பட்டினப்பாலையடிகளில் குறிக்கப் பெற்றுள்ளமை கூர்ந்து நோக்கற் பாலதாகும். சிதைந்து அழிவுக்குள்ளான கோயில்கள் நிலையை,

**இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென,**
**மணிப்புறாத் துறந்த மரஞ்சேர் மாடத்து**
**எழுதணி கடவுள் போகலின் புல்லென்று,**
**ஒழுகுபலி மறந்த மெழுகாய் புன்றிணை**

எனக்கூறுவதிலிருந்து அறியலாம்.

**காப்பியக் காலக் கோயில்கள்**

தமிழகத்தில் நிலவிய சமயங்களையும் அவற்றை மக்கள் மதித்த திறமையும் காப்பியங்கள் வழியாகக் காணமுடிகின்றது. ஒரு நிலத்தார் மற்றைய நிலத்தாருடன் சேர்ந்து தொழில் செய்யும் நிலை ஏற்பட்ட பின்னர் தான் திணைக் கருப்பொருளாகிய தெய்வ வழிபாடுகள் ஒருங்கு சேர்ந்து வளரும் நிலையைப் பெற்றன. இத் திணைவகை வழிபாடுகளே பண்டைத் தமிழ்நாட்டின் சமய வளர்ச்சிக்கு அடிப்படையாய் அமைந்தன எனலாம்.

சிலம்பிலும், மணிமேகலையிலும் பல சமயத்தவரின் வழிபாட்டிடங்கள் பேசப் பட்டுள்ளன. அவை கோயில், கோட்டம், நியமம், பள்ளியெனப் பெயரிடப் பெற்றிருந்தன. இவற்றை,

**பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்**
**........................................................**
**நீலமேனி நெடியோன் கோயிலும்**

எனவும்,

**நுதல்விழி நாட்ட திறையோன் கோயிலும்**
**உவனச் சேவல் உயர்த்தோன் நியமமும்**
**..........................................................**
**கோழிச் சேவற் கொடியோன் கோட்டமும்**
**ஆறத்துறை விளங்கிய அறவோர்ப் பள்ளியும்**
**(சிலம்பு-ஊர்காண் காதை-7-11)**

எனவும் சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது.

**காடமர் செல்லி கழிபெருங் கோட்டமு**
**..........................................................**
**குறியவும் நெடியவும் குன்றுகண் டன்ன**
**சுடுமண் ஓங்கிய நெடுநிலைக் கோட்டமும்**

எனவும் மணிமேகலை கோயில்களைப் பற்றிப் பேசுகிறது.

இவ்வாறு குறிப்பிடப்படும் கோயில்கள் சுதையாலும் செங்கற்களாலும் கட்டப் பட்டவை. இக்கோயில்களுக்கு முன்னோடியாக மரத்தால் ஆனகோயில்கள் கட்டப் பெற்றிருக்க வேண்டும் என அறிஞர்கள் கருதுவர்.

ஆரிய தவச் செல்வர்களும், நாடாளும் அரசர்களும், கணவனோடு ஒருங்குயிர் விடும் கற்புடைய மகளிரும் இறந்துபட்டால் அவர்களுக்குக் கோயில் எடுத்து வழிபடும் பழக்கம் தமிழகத்தில் தொன்று தொட்டு இருந்து வருவதாகும். இச்செய்தியினை,

**அருந்தவர்க்காயினும் அரசர்க்காயினும்**
**ஒருங்குடன் மாய்ந்த பெண்டிர்க்காயினும்**
**இறந்தோர் மருங்கிற் சிறந்தோர் செய்த**
**குறியவும் நெடியவும் குன்றுகண்டன்ன**
**சுடுமணோங்கிய நெடுநிலைக் கோட்டமும்**

என வரும் தொடரால் அறியலாம். இக்கூற்றிலிருந்து வழிபடும் தெய்வங் களுக்கன்றிப் பிறருக்கும் கோயில் எடுக்கப் பட்டமையை அறியமுடிகின்றது.

**திருமுறைகளில் கோயில்கள்**

நாயன்மார்களும் ஆழ்வார்களும் வாழ்ந்த காலத்தில் நூற்றுக்கணக்கான கோயில்கள் இருந்துள்ளன. அவையாவும் செங்கற்களால் ஆனவை, கோச் செங்கணான், சிவனுக்காக எழுபது மாடக்கோயில்கள் எழுப்பியதாகத் திருநாவுக்கரசரும், திருமங்கையாழ்வாரும் பாராட்டியுள்ளனர்.

**இருக்கிலங்கு திருமொழிவாம் எண்டோ ளீசற்கு**
**எழில் மாடம் எழுபது செய் துலக மாண்ட**
**திருக்குலத்து வளச்சோழன்**

என ஆழ்வார் புகழ்ந்து பாடியுள்ளார்.

அப்பர் பெருமான் சோழன் கட்டியது எழுபத்தெட்டு என்று கூறுவதோடு அவற்றின் வகைகளையும்,

**பெருங்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்**
**பெருக்கோயில் எழுபதினே டெட்டும் மற்றும்**
**கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற் கோயில்**
**கருப்பறியள் பொருப்பனையை கொரு**
**குடிக் கோயில்**
**இருக்கோதி மறையவர்கள் வழிபட்டதும்**
**இளங்கோயில் மணிக்கோயில் ஆலக்கோயில்**
**திருக்கோயில் சிவனுறையும் கோயில் சூழ்ந்து**
**தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீரு மன்றே**

என்கிறார். திருமுறை, திவ்ய பிரபந்த காலத்தில்

கோயில்களுக்கு மிகுந்த முன்னுரிமை அளிக்கப்பெற்றது. கோயில் இல்லாத ஊரைத் திருநாவுக்கரசர் திருக்கோயில் இல்லாத திருவில் ஊர் என்றார். சைவ அடியார்கள் ஊர்தோறும் சென்று திருக்கோயில்களைப் போற்றிப் பதிகம் பாடினர். ஆழ்வார்களும் பலதலங்களுக் குச் சென்று மங்களா சாசனம் செய்தனர். இவர்களுக்கு அடிப்படையாக அமைந்தது அவ்வவ் ஊர்களில் அமைந்துள்ள திருக்கோயில்களே ஆகும்.

## திருக்கோயில்கள் அமைப்பு

கோயில் அமைப்பில் நாகரபாணி, திராவிடபாணி, வேசரபாணி என்ற முப்பிரிவுகள் உள்ளன. சிகரம், சதுர வடிவமாக இருக்கும் கோயில்கள் நாகரபாணி என்றும் ஆறு, எட்டு முகம் உள்ளவை திராவிடபாணி என்றும், வட்டமான சிகரங்கொண்டவை வேசரபாணி என்றும் வகைப்படுத்துவர். ஆலயங்களின் அமைப்பை பிரசாத வடிவங்கள் என்பர். இவற்றை, சதுரம், நீண்ட சதுரம், 8 பட்டம், வட்டம் விருத்தம், நீண்ட விருத்தம், 6 பட்டம், ஹஸ்தி விருஷ்டம் எனக் கூறுவர்.

தமிழகத்தில் உள்ள பெரும்பாலான திருக்கோயில்கள் நீண்ட சதுர அமைப்பு உடையன. இத்தகைய அமைப்புகளின் மாதிரிகளை மாமல்லபுரத்தில் காணலாம்.

தர்மராாசரதம் - சதுரம், பீமரதம் - செவ்வகம், சகாதேவரதம் - கஜபிருஷ்டம் வட்டமான அமைப்புடைய திருக்கோயில்கள் தமிழகத்தில் இல்லை. வடநாட்டில் வட்டமானஅமைப்புடன்திருக்கோயில்கள் அமைந்திருப்பதைக் காணலாம்.

புறத்துக்காணும் கோயிலை உடம்பொடு ஒப்பிட்டுக் கூறுவர் திருமூலர்.

> **உள்ளம் பெருங்கோயில் ஊன் உடம்பு ஆலயம்**
> **வள்ளல் பிரானார்க்குவாய் கோபுர வாசல்**
> **தெள்ளத் தெளி ந்தார்க்கு சீவன் சிவ லிங்கம்**
> **கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே**

என்பது அவர்தம் கூற்றாகும். இக்கூற்றே பின் கோயில் உறுப்புகளுக்கு மனித உறுப்புகளாகிய சிரம் முதல் பாதம் ஈறாகப் பெயரிட அடிப்படையாக அமைந்தது.

திருத்தலங்களில் உள்ள திருக்கோயில்களே பக்தி இலக்கியங்களின் தோற்றத்திற்கு அடிப்படை. திருக்கோயில்களால் இலக்கியங்களும், இலக்கிய வகைகளும் பெருகியுள்ளன என்பது உண்மை. திருக்கோயில்கள் பல நிலைகளில் கலையாக விளங்குகிறது. தமிழரின் வாழ்வு நிலைமையும், நெறிமுறையும், குறிக்கோளையும் கலை வடிவமாக எடுத்துக் காட்டுவன திருக்கோயில்களே ஆகும்.

சமயக் காப்பிடமாகவும் வழிபாட்டு நிலையங்களாகவும் விளங்கிய திருக் கோயில்கள் இடைக்காலத்தில், கட்டடக் கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, படிமக்கலை, நாடகக்கலை, நாட்டியக்கலை, கல்வெட்டுக்கள், இலக்கியக்கலை, சேம்பு வார்ப்புக்கலை, நுண்கலைகள் (இயல், இசை, நாடகம்) ஆகிய பல்வேறு கலைகளின் தோற்றத் திற்கும் வளர்ச்சிக்கும் உறுதுணையாய் அமைந்துள்ளன.

## கலை வளர்த்த திருத்தலங்கள்

அழகுணர்க்கலையான சிற்பக்கலை தமிழகத் திருக்கோயில்களில் வாழ்ந்து வருகின்றது. கற்கள் எல்லாம் கதைபேசும் சொற்சித்திரங்களாக வடிவமைக்கப்பட்டன. திருமேனிகளும், செப்புப் படிமங்களும் அவற்றிற்கு அணி செய்யப்பட்ட ஆடை ஆபரணங்களும் கலை நுட்பம் செறிந்த அழகுப்பதுமைகளாகக் காட்சியளித்தன. இவையெல்லாம் தமிழன் கண்டுணர்ந்த சிற்ப செம்மை, ஆடை, அணிகலன் நிலைகளை எடுத்துக்கூறும் ஆய்வு மையங்களாகத் திகழ்கின்றன.

## மூவர் பாடல்களில் இசை

இசைக் கலைக்கு ஆதரவு தராத பௌத்த, சமண சமயங்களை எதிர்த்துப் போராடிய

இவர்கள் இசையின் மூலம் மக்கள் எழுச்சி பெறச்செய்தனர். இதில் திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் பெரும்பங்கு ஆற்றி அரிய பணியைச் செய்துள்ளனர். திருஞானசம்பந்தர் பாடல்களில் இசை என்ற சொல் பல இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

"இசைகள் பாடிட, இசைக்கற்று வல்லார், இசைக்குழவு மாறு வல்லார்" என்று இசையைப் பக்தியுடன் பாடவேண்டும் என்பதைத் திருஞானசம்பந்தர் குறிப் பிடுகின்றார்.

**"இசையைப் பத்தி மையாற் பாடுதலும்**
**இசைக் கிளவி**
**இசைப்பாடல் பக்தியுணர்வு ஊட்ட வல்லது"**

என்பதைத் திருஞானசம்பந்தர் பல இடங்களில் விளக்கியுள்ளார்.

**இசைபாடு பத்தர்**
**இசையால் உரை செய்வார்**

என்றும் குறிப்பிடுகின்றார். இசையை இறைவன் விரும்புவான் என்பதையும் திருத்தலப்பதிகங்கள் கூறுகின்றன.

**திடங்கொள் நாவின் இசைத் தொண்டர் பாடும்**
**பண்ணிய நடத்தொ டிசைபாடும் அடியார்கள்**
**இனமலிந் திசைபாட வல்லார்கள்**

என்னும் தொடர், தொண்டர்கள் இசைபாடி இறைவனை வணங்குவர் என்பதனைக் குறிப்பிடுகின்றது.

திருநாவுக்கரசர் "தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்" என்று குறிப்பிடுகின்றார். சுந்தரர் இறைவனை ஏழிசை வடிவ முடையவனாகக் காண்கிறார். திருநாவுக்கரசர், இசைப்பற்று, உடையவராக விளங்குபவர் என்பதனை பாடுவார் பணுவார் பல்லாண்டிசைக் கூறு பக்தர்கள்" என உறுதிபடக் கூறுகின்றனர்.

**பாட்டினான் தன் பொன்னடிக் கின்னிசை**
**இறைவன் திருவடியைப் பாடலால் வழிபாடு**

செய்தமையைத் திருநாவுக்கரசர் பெருமை யாகக் கருதுகின்றார்.

## இறை வழிபாட்டில் இசை

இறைவனை இசையால் வழிபடும் முறை பரிபாடலில் காணப்படுகின்றது. தென்னக இசையின் தாயாக விளங்கும் காரைக்கால் அம்மையார் இயற்றிய பண்களும், பதிகங்களும் பாடல்களால் இறைவனை வழிபடும் முறையைக் காட்டுகின்றன. நல்லிசைப் பண்ணுடைய பாடலுக்கு இறைவன் உரிமை உடையவன் என்பதைத் திருஞானசம்பந்தர்.

**பண்ணுலாவும் மறை பாடலினான்**

என்கிறார். வழிபாடு செய்வதற்குச் சிறந்த வழி இசைபாடி வழிபடுவதாகும் என்பதனை,

**பண்ணுனாற் அருமறை பாடினார்**

என்று திருஞானசம்பந்தரும்,

**பண்ணுடை பாடலோடும் பரம நீ ஆடுமாறே**

என்று திருநாவுக்கரசரும்,

**பண்ணாற் இசைகளது கொண்டு**
**பலரும்ஏத்தும் பழையனூர்**
**பண்ணிசையாற் மொழியாற் பலர் பாட**

என்று சுந்தரரும் கூறுகின்றனர்.

இம்மரபு திருமுறைகளிலும் திவ்யப் பிரபந்தங்களிலும் தொடர்ந்ததன் அடிப் படையில் சீர்காழி முத்துத்தாண்டவர், தில்லைவிடங்கன், மாரிமுத்தாப் பிள்ளை, சீர்காழிக்கோ, அருணாச்சலக்கவிராயர், கோபாலகிருஷ்ணன், பாரதியார், வையைச்சேரி ஆணை ஐயா, மாயுரம் வேதநாயகம் பிள்ளை, குணங்குடி மஸ்தான் சாகிப், நீலகண்டசிவம், இராமசாமி சிவம், போன்றோர் பாடியுள்ளனர்.

அருணகிரியாரின் திருப்புகழும், வள்ளலாரின் திருவருட்பாவும், தியாகராசரின் கீர்த் தனைகளும் இறை வழிபாட்டிற்குரிய சிறந்த சாதனமாக இசையைக் கருதின. இம்மரபு இன்றும் தொடர்கின்றது.

## திருமுறை விண்ணப்பம்

தேவாரம் எனச் சைவ சமயத்தாரால் போற்றப்படும் மூவர் திருப்பதிகங்களைப்

பல்லவர் காலம் தொட்டுத் தொடர்ந்து திருக்கோயில்களில் விண்ணப்பிக்கும் மரபு தமிழகத்திற்கே உரிய சிறப்பாகும். இப்பனுவல்களை இறைவன் முன்பு பாடிவந்த பெருமக்களைத் திருப்பதியம் விண்ணப்பம் செய்வார் என்றும் திருப்பாட்டு ஓதுவார் என்றும் பிற பெயர்களாலும் குறிப்பிடப்பட்ட பல்வேறு செய்திகளை மன்னர்களின் கல்வெட்டுக்கள் மூலம் அறியமுடிகின்றது.

தேவாரத் திருப்பதிகங்கள் இன்று பாடுபவர்கள் ஓதுவார் பரம்பரையினராவர். ஆனால் இன்றைக்கு ஓராயிரம் ஆண்டு களுக்கு முன் தேவாரப் பாடல்களைத் தஞ்சாவூர் கோயிலில் பண்ணிசைத்துப் பாடியோர் பிடாரர் என்றும் அழைக்கப் பட்டனர்.

திருக்கோயில் வழிபாட்டில் இன்றும் திருமுறை விண்ணப்பித்தல் மேற்கொள்ளப் பட்டு வருகின்றது. திருமுறைகளை முற்றோதுதலும், திருத்தலப்பதிகங்களைப் பாடுதலும் மரபாகப் பின்பற்றப்படுகின்றன.

## திருத்தலங்கள் காட்டும் சமுதாயப் பண்பாடு

திருக்கோயில்களில் நடத்தப்பெறும் வழிபாட்டுமுறைகள் சமுதாய விழிப் புணர்வு, ஒற்றுமையைக் காட்டும் கூடமாக ஆலயங்கள் திகழ்கின்றன. நாள் வழிபாடு, மாத வழிபாடு, திருவிழாக்கள் போன்றவை மக்கள் ஆலயங்களோடு சங்கமிக்கும் நிகழ்வாகவே உள்ளன.

திருத்தலங்கள் பண்டைய மரபு முறைகளைப் பாதுகாத்து வரும் காலப் பெட்டகமாகத் திகழ்கின்றன. அறிவியல் தொழில் நுட்பம் வளர்ந்த இக்காலத் தில் இம்முறைகள், காப்பாற்றப்பட்டும், பின்பற்றப்பட்டும் வருவது சிறப்பான தொன்றாகும்.

எத்தனையோ மருத்துவ சாதனங்களால் தீர்க்க இயலாத பிணிகள் வழிபாட்டின் நம்பிக்கையில் தீர்க்கப்படுகின்றன. திருக் கோயில்கள் தந்த இலக்கியப் படைப்புகள் தமிழ்மொழிக்கும், தமிழ்நாட்டிற்கும் சிறப்பு செய்யும் நிலையில் அமைந்துள்ளன.

## தொகுப்புரை

மக்களை ஆண்ட மன்னர்கள் அனைவரும் மண்ணையும், விண்ணையும் படைத்துக் காத்த கடவுளை மறக்கவில்லை. வழிபடு தெய்வத்திற்கும் ஏற்புடை தெய்வங்களுக்கும் கோயில் கட்டி வழிபடச் செய்தும், மரபு நிலை கெடாது, வழிபாடும், திருவிழாக்களும் செய்து வந்தனர். அவர்கள் விட்டுச் சென்ற அரும்பணியை நாம் நம் கடமையாகக் கொண்டு இது போன்ற பாடல்பெற்ற தலங்களின் சிறப்புக்களையும் பெருமைகளையும் எல்லோரும் தெரிந்து கொள்ளச் செய்ய வேண்டும்.

ஆறுகள் பலவானாலும் சேருமிடம் ஒன்றாதல் போலச் சமயங்கள் பலவானாலும் வழிபாட்டின் பயன் ஒன்று என்பதை உயர்ந்தோர் ஒப்புக்கொள்வர். சக்தியும், சிவமும் இல்லாமல் எத்தெய்வமும் இல்லை. சக்தியும், சிவமும் உள்ளதைத் தெளி வாக உணர்தல் கூடும். அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையை அகப்படுத்த அனைவரும் முயலவேண்டும். இதனை வள்ளலார் பெருமான்,

**அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே**

என்றார். அனைத்து தெய்வங்களும் அன்பிற்குக் கட்டுப்பட்டதை அறிஞர்கள் நன்குணர்ந்தவர்கள். தென்னகத்தில் திருத்தலங்கள் மிகுதி. வடநாட்டில் நதிகள் மிகுதி. இருநாட்டிலும் இருவேறு பெருமைகள் உள்ளன. வடக்கில் உள்ளவர் ஆலயம் தொழத் தென்னகம் வருகின்றனர். தென்னகத்தில் உள்ளவர் புனித நீராட வடநாடு செல்கின்றனர். இந்திய நாட்டு மக்களின் பண்பாட்டு வளர்ச்சிக்கும், சமய ஒற்றுமைக்கும் ஓர் எடுத்துக்காட்டாகவே திருக்கோயில்களின் பெருமையும், சிறப்பும் விளங்குகின்றது.

**பார்வை நூல்கள்**

1. பரணிதரன், திருத்தலப் பெருமை (தஞ்சை கோவில்கள் பாகம்-3), கலைஞன் பதிப்பகம், சென்னை-17, முதற்பதிப்பு, 2000.
2. தண்டபாணி தேசிகர், முதல் திருமுறையில் வந்துள்ள தலங்களின் குறிப்புகள், தருமபுரம், 1953.
3. உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், திருத்தலங்கள் வரலாறு, உ.வே.ச ா.நூல்நிலையம், சென்னை - 90, முதற்பதிப்பு-1990.
4. ரா.பி.சேதுப்பிள்ளை, தமிழம் ஊரும் பேரும், ப.307.
5. திருத்தலங்கள் வரலாறு, டாக்டர் உ.வே.சா.நூல் நிலைய வெளியீடு (1990), ப.17.
6. புலவர். செந்துறைமுத்து, திருமுறையும் திருக்கோயில்களும், ப.73.
7. பி.எம்.சுந்தரம், ஆலய வழிபாட்டில் இசை.
8. சண்முக. செல்வகணபதி, திருக் கோயில்களில் மங்கல இசை வழிபாடு.
9. துளசி.இராமசாமி, தமிழகக் கலைச் செல்வங்கள்.